**செ. கு. எண்:60** **நாள்:27.02.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.2.2013 அன்று சென்னை, விவேகானந்தர் இல்லத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் 150–வது பிறந்த ஆண்டு விழாவினை துவக்கி வைத்து ஆற்றிய பேருரை

---

வரவேற்புரை ஆற்றி அமர்ந்துள்ள சென்னை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் மேலாளர் சுவாமி ஆசுதோஷானந்தர் அவர்களே,

வாழ்த்து மடல் வாசித்த சுவாமி விமூர்த்தானந்தர் அவர்களே,

ஆசியுரை வழங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ் அவர்களே,

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே,

நன்றியுரை நவிலவுள்ள சுவாமி தர்மிஷ்டானந்தர் அவர்களே,

சகோதர – சகோதரிகளே,

மாணவ – மாணவிகளே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லம் இந்த விவேகானந்தர் இல்லம். ராமகிருஷ்ணா மடம் துவங்கியதிலிருந்து முதல் ஒன்பது ஆண்டு காலம் இந்த இல்லத்தில் தான் இயங்கியது. இந்த இல்லத்தில் ஒன்பது நாட்கள் தங்கி வீர உரைகளை ஆற்றியுள்ளார் சுவாமி விவேகானந்தர்.

இப்படிப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த இல்லத்திலிருந்து, சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழாவினை துவக்கி வைத்து; "விவேக ஜோதி" தீபம் ஏற்றி வைத்து; பண்பாட்டு மையத்திற்கு அடிக்கல் நாட்டி; சுவாமி விவேகானந்தரின் புகைப்படத் தொகுப்பு நூலை வெளியிட்டு உங்கள் முன் உரையாற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதை எனக்குக் கிடைத்த பாக்கியமாக நான் கருதுகிறேன். இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவருக்கும், அதன் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர் விவேகானந்தர். சுவாமி விவேகானந்தர் மற்றும் அவரது குரு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் கொள்கைகளின் பால், எனக்கு சிறு வயது முதலே மிகுந்த ஈடுபாடு உண்டு. என்னுடைய இல்லத்தில் உள்ள நூலகத்தில் சுவாமி விவேகானந்தர் மற்றும் அவரது ஆசான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் புத்தகங்கள் நிறைய உள்ளன. அவற்றை நான் அடிக்கடி படிப்பது உண்டு.

இந்து சமயத்தின் பெருமையை உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் எத்தகைய வழியில் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதை இந்த உலகிற்கு உணர்த்தியவர் சுவாமி விவேகானந்தர். அனைவரிடத்திலும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமத்துவமாக வாழ்வதே சிறந்தது என்கிறார் சுவாமி விவேகானந்தர். அளவு கடந்த அறிவையும், மன வலிமையையும் கொண்ட சுவாமி விவேகானந்தர், ஈகை குணத்திற்கும், தலைமைப் பண்பிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு சிறந்த தேச பக்தர். ''இளைஞர்களே! தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்!'' என்று உபதேசித்தவர் சுவாமி விவேகானந்தர்.

''இறைவனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நான் பார்க்க முடியுமா?'' என்று தன்னுடைய குருவான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் வினா எழுப்பினார் சுவாமி விவேகானந்தர். அதற்கு பதில் அளித்த ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''இறைவனை நானும் கண்டுள்ளேன். உனக்கும் காட்டுவேன்'' என்று கூறினார். ஆறாண்டுகள் பயிற்சி பெற்ற சுவாமி விவேகானந்தருக்கு, ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்பதை உணர்த்தியவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மறைவிற்குப் பின் மக்களுக்கு தொண்டு செய்யுங்கள் என மன்னர்களை வற்புறுத்தியவர் சுவாமி விவேகானந்தர். 1893 ஆம் ஆண்டு, சிகாகோ நகரில் நடைபெற்ற சர்வ மத மாநாட்டில், “சகோதர, சகோதரிகளே” என்று துவங்கி அவர் பேசிய பேச்சு உலக மக்களை கவர்ந்தது.

1897 ஆம் ஆண்டு, உலக நன்மைக்காக தொண்டும், துறவும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், ''ராமகிருஷ்ண மிஷன்'' சுவாமி விவேகானந்தர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. ''சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்'' என்று உபதேசித்தவர் சுவாமி விவேகானந்தர். ஏனென்றால், சுயநலம் இல்லாத இடத்தில் தான் தியாக மனப்பான்மை இருக்கும். தியாக மனப்பான்மை இருந்தால் தான் மக்களுக்கு தொண்டாற்ற முடியும். இந்தத் தருணத்தில், சுவாமி விவேகானந்தரின் இளமைப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இளமைப் பருவத்தில் நரேந்திரனாக இருக்கும் போதே, துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்ற அவா சுவாமி விவேகானந்தரிடம் இருந்தது. தனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தனது தாயாரிடம், தனது துறவு விருப்பத்தை தெரிவிப்பார் சுவாமி விவேகானந்தர்.

ஒரு முறை தன் தாயாரிடம் துறவறம் மேற்கொள்ள விவேகானந்தர் அனுமதி கேட்ட போது, “சமையலறைக்குப் போய் அங்கிருந்து கத்தியை எடுத்து வா” என்றார் அவரது அன்னை. விவேகானந்தரும் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்தார். உடனே, ''கொஞ்ச நாட்கள் கழியட்டும். பின்பு நீ துறவறம் மேற்கொள்ளலாம்'' என்று தெரிவித்தார் விவேகானந்தரின் அன்னை. எப்போதெல்லாம் தன்னுடைய துறவு விருப்பத்தை சுவாமி விவேகானந்தர் தன் தாயிடம் தெரிவித்தாலும், இதையே தான் அவருடைய தாயார் சொல்லி வந்தார். துறவுக்கும், கத்திக்கும் என்ன தொடர்பு என்று விவேகானந்தருக்கு புரியவில்லை.

ஒரு முறை இவ்வாறு சுவாமி விவேகானந்தர் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்ததும், ''இனி நீ துறவு மேற்கொள்ளலாம்'' என்று கூறினார் சுவாமி விவேகானந்தரின் அன்னை.

உடனே சுவாமி விவேகானந்தர், ''கத்திக்கும், துறவுக்கும் உள்ள தொடர்பு என்ன?'' என்று தன் அன்னையிடம் வினவினார்.

விவேகானந்தரின் அன்னை ''முன்பு ஒவ்வொரு முறை நான் கத்தியைக் கொண்டு வா என்று சொன்ன போதும், பாதுகாப்பான கைப்பிடியை நீ பிடித்துக் கொண்டு, ஆபத்தான கூர்மைப் பகுதியை என் பக்கம் நீட்டுவாய். ஆபத்து பிறருக்கு, பாதுகாப்பு உனக்கு என்கிற சுயநல உணர்ச்சியின் வெளிப்பாடு அது. ஆனால் இப்போது ஆபத்தான கூர்மைப் பகுதியை நீ பிடித்துக் கொண்டு, பாதுகாப்பான கைப்பிடியை என் பக்கம் நீட்டினாய். அதாவது, பிறரை பாதுகாக்க வேண்டும் என்ற தியாக உணர்வு உன்னிடம் ஏற்பட்டுவிட்டது. அதனால் தான், துறவறம் மேற்கொள்ள நான் சம்மதித்தேன்'' என்று கூறினார்.

இதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், தியாக மனப்பான்மையே துறவின் அடிப்படை, அஸ்திவாரம் என்பதாகும். தியாக மனப்பான்மை இருந்தால் தான் பிறருக்கு தொண்டாற்ற முடியும்; மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தொண்டு என்பது சுயநலமின்றி, பிறர் நலத்திற்காக உழைப்பது. அனைத்து மதங்களும் பிறருக்கு உதவுவதை போதிக்கின்றன. இதனால் தான், நம் நாட்டில் பல தொண்டு நிறுவனங்கள் செயல்படுகின்றன. தொண்டுகளிலே பல வகை உண்டு. நாட்டுக்கு செய்யும் சேவை ''தேசத் தொண்டு''. மக்களுக்கு செய்யும் சேவை ''மக்கள் தொண்டு''. இறைவனுக்குச் செய்யும் சேவை ''திருத்தொண்டு''. ஒவ்வொரு தொண்டு நிறுவனமும் ஒவ்வொரு விதமான சேவையை செய்கின்றது. ஆனால், இந்த மூன்று தொண்டினையும் செய்கின்ற நிறுவனமாக இந்த ராமகிருஷ்ண மடம் விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்தக் காலத்திலே, லாப நோக்குடன் செயல்படும் மிகப் பெரிய வணிக நிறுவனங்கள் கூட, லாபத்தின் ஒரு பகுதியை கல்வி, மருத்துவம் போன்ற பொதுநலத் தொண்டிற்காக, சமூக சேவைக்காக ஒதுக்குகின்றன.

அதே சமயத்தில், ''பொதுத் தொண்டு'', ''பொது வாழ்வு'' என்று சொல்லி தன்னலத்திற்காக அதையே தொழிலாக மாற்றிக் கொண்டவர்களும் இந்த நாட்டில் இருக்கத் தான் செய்கிறார்கள். தொழில் தொண்டாகலாம். தொண்டு தொழிலாகக் கூடாது.

என்னைப் பொறுத்த வரையில், நான் அரசியலுக்கு வருவதற்கு சுவாமி விவேகானந்தர் ஒரு மிகப் பெரிய தூண்டுகோலாக விளங்கினார் என்று சொன்னால் அது மிகையாகாது.

1982 ஆம் ஆண்டு நான் அரசியலில் காலடி எடுத்து வைத்த போதே, சுவாமி விவேகானந்தரைப் பற்றி ஒரு பேட்டியிலே குறிப்பிட்டு இருக்கிறேன்.

சுவாமி விவேகானந்தர் துறவியாக இருந்து மக்கள் சேவையைப் புரிந்தார். நானும் அவர் வழியில், அரசியலில் துறவறம் பூண்டு மக்கள் சேவையை செய்து வருகிறேன். எனக்கு சுயநலம் என்பது அறவே கிடையாது. எனக்கென்று எதுவும் தேவையில்லை. எனக்கென்று யாருமே கிடையாது. எனக்கு எல்லாமே தமிழக மக்கள் தான். தமிழக மக்களால் நான்; தமிழக மக்களுக்காகவே நான்.

தொழிலிலே வெற்றி, தோல்வியுண்டு. ஆனால், தொண்டிலே தோல்வி என்பது கிடையாது. சுயநலமின்றி எந்தவிதப் பலனையும் எதிர்பாராமல், எந்த பணியை செய்தாலும் அதில் வெற்றி நிச்சயம்.

சுவாமி விவேகானந்தரால் துவக்கப்பட்ட ராமகிருஷ்ண மிஷன், எந்த நோக்கத்திற்காக, எந்த குறிக்கோளுக்காக, எந்த லட்சியத்திற்காக துவக்கப்பட்டதோ; அதிலிருந்து சிறிதும் நழுவாமல் அவருடைய வழியில் சுயநலமின்றி, தன்னலமின்றி, மன உறுதியுடன் மிகச் சிறந்த மக்கள் சேவையை, நாட்டுப் பணியை, ஆன்மீகப் பணியை புரிந்து வருகிறது.

சமூக சேவைகளான மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், விடுதிகள், ஊரக வளர்ச்சி மையங்கள் ஆகியவற்றை இந்தியா முழுவதிலும் இயக்கி வருவதோடு மட்டுமல்லாமல்; நில நடுக்கம், புயல், வெள்ளம் மற்றும், இதர இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளையும் உலகெங்கும் இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

ராமகிருஷ்ண மடத்தின் மக்கள் சேவையையும், சமூகப் பணிகளையும் நான் நன்கு அறிந்தவள். அதனால் தான் ராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகிகள் அரசுக்கு சொந்தமான இந்த விவேகானந்தர் இல்லம் அமைந்துள்ள இடத்தினையும்; அதன் அருகில் காலியாக உள்ள நிலத்தையும் நீண்ட கால குத்தகை அடிப்படையில் அளிக்குமாறு விடுத்த வேண்டுகோளினை உடனடியாக ஏற்று, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன். அதன் அடிப்படையில், 99 ஆண்டு கால குத்தகை அடிப்படையில், மிகக் குறைந்த வாடகையில் இந்த விவேகானந்தர் இல்லமும்; அதை ஒட்டியுள்ள காலி நிலமும் ராமகிருஷ்ண மடத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவாமி விவேகானந்தரைப் பற்றி குறிப்பிட்ட திரு. கி.வா. ஜகன்னாதன் அவர்கள், ''விவேகானந்தரின் உபதேசங்களில் வீணையின் மெல்லிசை இல்லை. வீர முரசே ஒலிக்கிறது'' என்றார். அந்த அளவுக்கு மன உறுதி படைத்தவர் சுவாமி விவேகானந்தர்.

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு இயற்கை எழில் மிகுந்த அவரது நண்பரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன.

ஒரு நாள் மாலை பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் அவரது நண்பரும், நண்பரின் மனைவியும் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அந்த மாட்டின் சீற்றத்தை கண்டு நடுங்கிப் போன நண்பரின் மனைவி அப்படியே மயங்கி விழுந்துவிட்டார். மனைவியை தூக்க நண்பர் முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கி விட்டது. நண்பருக்கு கை, கால் ஓடவில்லை.

இன்னும் சில நொடிகள் அங்கிருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்று நினைத்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓட்டம் பிடித்தார். ஆனால், சுவாமி விவேகானந்தரோ அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

சீறி வந்த மாடு சுவாமி விவேகானந்தரையும், கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது.

மாடு தன்னை துரத்துகிறது என்பதை அறிந்த நண்பர் இன்னும் வேகமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினார். மாடும் விடாமல் நண்பரைத் துரத்தியது.

என்ன செய்வது என்பதறியாமல் திகைத்த நண்பர், சட்டென்று ஒரு கட்டடத்திற்குள் புகுந்து தப்பினார். பின்னர், பண்ணை ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டனர்.

விவேகானந்தர் அதன் பிறகே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

அப்போது அவரது நண்பரும் அங்கு வந்து சேர்ந்தார். நண்பருக்கோ ஒரே திகைப்பு. அந்த சமயத்தில், நண்பரின் மனைவிக்கும் மயக்கம் தெளிந்தது.

‘‘ஆபத்தான நேரத்திலும் துளி கூட பயமே இல்லாமல் எப்படி உங்களால் உறுதியாக நிற்க முடிந்தது?’’ என்று சுவாமி விவேகானந்தரைப் பார்த்து கேட்டார் நண்பர்.

அதைக் கேட்டு புன்னகை புரிந்த சுவாமி விவேகானந்தர், ‘‘நான் எதையும் வித்தியாசமாக செய்யவில்லை. வருவது வரட்டும் சமாளிப்போம் என்ற மன உறுதியுடன் நின்றுவிட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால் தான் மாடு, என்னை விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது’’ என்று கூறினார்.

உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு அஞ்சி ஓடாமல், வருவது வரட்டும் சந்திப்போம், என்ற மன உறுதியுடன் தன் வாழ்நாள் முழுவதும் விளங்கியவர் சுவாமி விவேகானந்தர்.

என்னைப் பொறுத்தவரையில், எனக்கு வருகின்ற சோதனைகளை, முட்டுக்கட்டைகளை, தடைகளை சுவாமி விவேகானந்தர் வழியில் தான் நான் தகர்த்து வருகிறேன்.

விவேகானந்தரின் கருத்துக்கள் அனைத்துமே என்றைக்கும், எல்லா காலகட்டத்திற்கும், பொருத்தமானவை. நமக்கெல்லாம் ஒரு மிகப்பெரும் வழிகாட்டி சுவாமி விவேகானந்தர். தீயைப் போன்ற சூடான அவரது கருத்துகளை, தன்னலமற்ற சேவையை, திடமான மன உறுதியை இளைஞர்களாகிய நீங்கள் எல்லாம் பின்பற்றினால் நீங்களும் சிறந்து விளங்கலாம்; இந்த நாடும் சிறந்து விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவாமி விவேகானந்தரால் துவங்கப்பட்ட இந்த ராமகிருஷ்ண மிஷன், பழமை மாறாமல் எந்த நோக்கத்திற்காக துவங்கப்பட்டதோ அதே நோக்கத்திற்காக, 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து சிறப்புற செயலாற்றி வருவது; மக்கள் பணியாற்றி வருவது பாராட்டுதலுக்குரியது; போற்றுதலுக்குரியது. இது போன்ற நிறுவனங்கள் தான் இளைய சமுதாயத்தினரின் நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்குகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு விழாவை நடத்திக் கொண்டிருக்கும் ராமகிருஷ்ண மடத்தினரின் நாட்டுப் பணி, சமுதாயப் பணி, ஆன்மீகப் பணி ஆகியவை மேன்மேலும் சிறந்து விளங்க வேண்டும்; இளைய சமுதாயத்தினர் இடையே மன உறுதியையும், தன்னலமற்ற சேவை மனப்பான்மையையும் உருவாக்குவதற்கான செயல் திட்டங்களை வகுத்து; அதனை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்று ராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகிகளை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டினை ஓராண்டு முழுவதும் சீரோடும், சிறப்போடும், கொண்டாடிக் கொண்டிருக்கும் ராம கிருஷ்ண மடத்திற்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு;

லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து (Lokah Samastha Sukhino Bhavanthu), அதாவது, உலகத்தில் உள்ள அனைவரும் எல்லா வளங்களும், நலங்களும் பெற்று இன்புற வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து;

இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் எழுப்பியுள்ள சுவாமி விவேகானந்தர் பண்பாட்டு மையத்திற்கு தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

.................................................................

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**

.................................................................